முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 16/2020

அரசுதரப்பு 2-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கரதாஸ் | வயது | : | 43 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமதாஸ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.

முதல் விசாரணை - நான் தற்போது மாளிகம்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். 12.12.2018 அன்று காலை 6.00 முதல் 7.00 மணிக்குள் கும்பகோணம் ரோட்டில் உள்ள அண்ணாமலை யுனிவர்சிட்டி அருகே டீக்கடை வழியே சென்றபோது நானும், என்னுடன் ஆண்டிகுப்பத்தை சேர்ந்த சேகர் என்பவரும் டீ குடிக்க சென்றோம். பக்கத்தில் கூட்டமாக இருந்தது. காடாம்புலியூர் போலிசார் அங்கிருந்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். போலிசார்தான் எங்களை கூப்பிட்டார்கள். வரைபடம் வரைந்ததற்கு எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நானும், சேகரும் கையெழுத்து போட்டோம். பார்வைமகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகசர் அசாஆ. 2 ஆகும். 2 கூழாங்கற்கள், கோலி குண்டு, உடைந்த

கண்ணாடி துண்டுகள் ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ. 3 ஆகும். என்னிடம் காட்டப்படும் கோலிகுண்டுகள், கண்ணாடி துண்டுகள், கருங்கற்கள் ஆகியவை சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதுதான். உடைந்த பேருந்தின் கண்ணாடிதுண்டுகள் சாபொ.1 வரிசை, சிறிய கருங்கற்கள் சாபொ.2 வரிசை, கோலி குண்டு-1 சாபொ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 ஆம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை - என்னுடைய ஊர் மாளிகைபட்டு. பனிக்கன்குப்பத்திலிருந்து மேற்கே போனால் மாளிகம்பட்டு. கும்பகோணம் மெயின்ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் பனிக்கன்குப்பம் வந்து வரவேண்டும். பனிக்கன்குப்பத்தில் நிறைய டீக்கடைகள் உள்ளன. அண்ணா யுனிவர்சிட்டிக்கும் பனிக்கன்குப்பத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிமீ இருக்கும். அண்ணா யுனிவர்சிட்டிக்கு அருகில் டீக்கடைகள் உள்ளன. சம்பவ சமயத்தில் சாலையை அகலப்படுத்த சாலை போடவில்லை. நானும், போலிசாரும் அங்கு இருந்தோம். எங்களை தவிர வேறு யாரும் இல்லை. சான்று பொருட்களை போலிசார்தான் எடுத்தனர். வரைபடத்தில் ஒரு கையெழுத்து போட்டேன். கம்யூட்டரில் ஏற்கனவே எடுத்து வைத்த பேப்பரில் போட்டேன். கம்யூட்டரில் எப்போது பிரிண்ட் எடுத்தார்கள் என்று தெரியாது. அதில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், என் முன்பு சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மகசரில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று தெரியாது. போலிசார் ஜோடித்து வைத்த ஆவணங்களில் நான் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல.

2, 3 எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை - மேற்படி 1ஆம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார்.